## எஸ்.ஆர்.எம். கல்லூரியில் மருந்தியல் சங்க மாநாடு: டாக்டர் தாரிணிக்கு வேந்தர் சத்யநாராயணன் விருது வழங்கினார்




சென்னை, டிச.17–

சென்னை காட்டாங்கொளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், மருந்தியல் துறை, மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான மையம், எஸ்.ஆர்.எம். மருந்தியல் கல்லூரி, இந்திய மருந்தியல் சங்கம் ஆகியவை இணைந்து மருந்தியல் சங்கத்தின் 53வது மாநாட்டை எஸ்.ஆர்.எம். கல்லூரி வளாகத்தில் நடத்தியது.

இந்த மாநாட்டுக்கு எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் வேந்தர் (கல்வித் துறை) பா.சத்யநாராயணன் தலைமை தாங்கினார். சங்கர நேத்ராலயாவின் தலைவர் டாக்டர் டி.எஸ்.சுரேந்திரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இதில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் துணைவேந்தர் முத்தமிழ் செல்வன், பதிவாளர் எஸ்.பொன்னுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் மருந்தியல் துறையில் பங்களிப்புக்காக டாக்டர் டி.ஆர். பாரிவேந்தர் விருதை, டாக்டர் தாரிணிக்கு, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் வேந்தர் (கல்வித் துறை) பா.சத்யநாராயணன் வழங்கி பேசியதாவது:

இந்தியா கல்வியின் மையமாகவும், நாளந்தா போன்ற பல்கலைக்கழகங்களை கொண்டதாகவும் உலகின் வல்லரசாகவும் இருக்கிறது. அதேபோல், உலகின் மருந்தியல் தலைநகரமாகவும் உள்ளது. இந்த மாநாடு தொழில்துறையில் வ ணி க ம ய ம ா க் க க் கூ டி ய தயாரிப்புகளின் வளர்ச்சியின் விளைவாக புதுமை மற்றும் ஆராய்ச்சிக்கு வழிவகுக்கும். எஸ். ஆர்.எம்.மில் இவை அனைத்தையும் இணைத்துக்கொள்ள நாங்கள் திட்டமிட்டு உள்ளோம். இதன் மூலம் மருந்தியலில் சிறப்பான ஒரு மையத்தை நாங்கள் பெற முடியும்.


இவ்வாறு அவர் பேசினார்.

# "விதைகளே பேராயுதம்"

## வையை ஆண்டு மலர்–2023

## (பாண்டிய மண்டல வேளாண் பேரமைப்பு)

**பதிப்பாசிரியர்:**
**அ.சரவணகுமார்**
**பக்கம்: 124 விலை ரூ.150**
**வெளியீடு:**
**பென்னிக்குயிக் பதிப்பகம்,**
**41/1411, செந்தில்நாதன் தெரு,**
**தாசில்தார் நகர், மதுரை– 20**
**பேசி: 82205 50688;**
**97892 42192.**




இயற்கை உழவர்களின் ஆண்டு மலராக வெளியாகி உள்ள, "வையை ஆண்டு மலர்–2023" இல், பல்வேறு தலைப்புகளின் கீழ் 30 கட்டுரைகள், பல்வேறு ஆளுமைகளால் எழுதப்பட்டு இடம் பெற்றுள்ளது. ஒவ்வொன்றும் இயற்கை குறித்த பல்வேறு தரவுகளை கொண்டு வடிக்கப்பட்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். இயற்கை வேளாண்மை சார்ந்தவர்களுக்கு மட்டுமின்றி, வாசிப்பு பழக்கம் உள்ள அனைவருக்குமே இந்த நூலில் உள்ள கட்டுரைகள், அறிவு வேட்கையை தூண்டுவதாக உள்ளது என்பதை மறுக்க முடியாது.

"விதைகளே பேராயுதம்" என்ற முன்னுரையில் விதைத் திருவிழா என்ற ஒன்றை ஏன் நடத்தினோம், நோக்கம் என்ன? என்பதை கருணாகர சேதுபதி விளக்கி உள்ளார். அதனைத் தொடர்ந்து, பாமயன் எழுதியுள்ள "புதிய வாழ்வுக்கு புஞ்சைத் தாவரங்கள்" என்ற முதல் கட்டுரையில் சிறு தானியங்கள் எனப்படும் வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கம்பு, சோளம், கேழ்வரகு உள்ளிட்டவை உண்மையில் பெருமைக்குரிய தானியங்கள் என்றும், அவை புறக்கணிக்கப்பட்டது எப்படி? என்றும் விளக்கி உள்ளார். அதிலும் ஒரு கிலோ நெல் விளைவிக்க 1550 லிட்டர் நீர் தேவைப்படும் நிலையில், அதில் 10 இல் ஒரு பங்கு நீர் தேவையே உள்ள புன்செய் தாவரங்கள் புறக்கணிக்கப்பட்டது தவறானது என்பதையும், இவற்றை விளைவிப்பது எளிது, செலவு குறைவு என்பதுடன், இதிலுள்ள ஊட்டச்சத்துகள் அரிசியை விட மிகமிக அதிகமானது என்பதையும் அழகாக விளக்கி உள்ளார்.

### மேற்குத் தொடர்ச்சி மலை

மேலும் நெல்லை விளைவிக்க தேவையான அணைகள், ஆறுகள் என எதுவும் புன்செய் தானியங்களை விளைவிக்க தேவைப்படுவதில்லை என்பதையும், பசுமைப் புரட்சியால் புறக்கணிக்கப்பட்ட இந்த தானியங்களால், சூழலியல் காப்பாற்றப்படும் தன்மை, பொருளியல், பண்பாட்டியலில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் கணக்கில் கொள்ளப்படவில்லை என்பதையும் ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியுள்ளது சிறப்பு.

முனைவர் வேலுச்சாமி கார்த்திகேயன் எழுதியுள்ள "விதைப் புரட்சி" என்ற கட்டுரையில், ஒரு லட்சத்துக்கு மேலாக இருந்த பாரம்பரிய நெல் ரகங்களில் இன்று, வெறுமனே 7000 மட்டுமே எஞ்சியுள்ளது என்பதையும், ஒரு மனிதனுக்கு ஆண்டுக்கு 58 கிலோ அரிசி தேவை என்ற நிலை இப்போது 69 கிலோவாக மாறியுள்ளதை கோடிட்டு காட்டியுள்ளதுடன், ரசாயன உரங்கள் பயன்பாடு காரணமாக, தேன் பூச்சிகள் குறைவதால் மனித இனத்துக்கு ஏற்படும் பாதிப்புகளையும் தரவுகளுடன் சுட்டிக்காட்டி உள்ளார்.

அதுதவிர, இயற்கை வேளாண்மையை காக்க, வாழ்க்கை முழுக்க போராடிய வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பற்றிய கட்டுரைகள், "மேற்குத் தொடர்ச்சி மலையின் உயிர் சூழல் வளமை" குறித்த ஓசை காளிதாசன் கட்டுரையில், இங்குள்ள 4000 வகை தாவரங்களில் 1700 தாவரங்கள் உலகில் வேறெங்கும் இல்லாதது என்றும், 640 மர வகைகளில் 360 வேறு எங்கும் இல்லாதது என்பதையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இங்கே 330 வகை வண்ணத்துப் பூச்சிகள், 225 வகை ஊர்வன, 508 வகை பறவை இனங்கள், 120 வகை பாலூட்டிகள், உலகிலுள்ள 17 சதவீத புலிகளும், 30 சதவீத யானைகளும் இந்த காடுகளையே தங்கள் வாழ்விடங்களாக கொண்டுள்ளன என்பது உள்ளிட்ட பல்வேறு புள்ளிவிவரங்களுடன் மேற்குத் தொடர்ச்சி மலை குறித்து பரந்த பார்வையை தந்துள்ளார்.

### தேனீயும், வெண்பூசணியும்...

இதுதவிர, முனைவர் வி.மாரப்பன் எழுதிய "இயற்கை மருத்துவமும் வெண்பூசணியும்", சித்த மருத்துவர் விஜய் விக்கிரமன் எழுதிய "சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்: தமிழர் பாரம்பரிய அறிவின் அறிவியல் ஆய்வு மையம்", பாண்டியன் பனையேறி எழுதிய "பனை எங்கள் திணை", ஆசிரியை காவியா எழுதிய "இயற்கை எவ்வளவு பிடிக்கும்", ஏ.எஸ். கதிரவன் எழுதிய "மனிதன் ஒரு முழுமையான இயற்கை கூறு", வானதி ரவிக்குமார் எழுதிய "சிறுதானியங்கள்" ஆகிய கட்டுரைகள் உள்ளிட்ட அனைத்தும் படிக்க படிக்க ஆவலைத் தூண்டுவதாகவே உள்ளது.

"காட்டு யானை" என்ற கட்டுரையில் யானைகளின் அறிவுத் திறன், வாழ்க்கை முறை ஆகியவை மிக அழகாக விளக்கப்பட்டுள்ளது. அந்த தகவல்கள் அனைத்தும், யானைகளை பற்றிய மதிப்பீடுகளை நம்மில் இன்னும் அதிகப்படுத்துகின்றன என்றே சொல்ல வேண்டும். நிறைவாக இடம்பெற்றுள்ள விஜய் எழுதிய "தேனீக்களும் மனிதர்களும்"என்ற கட்டுரையில் தேனீக்கள் தனது வாழ்நாளில் 1 லட்சத்து 40 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பயணம் செய்கிறது எனும் தகவல், கடல் மட்டத்தில் இருந்து 29,525 அடி உயரம், அதாவது எவரெஸ்ட் சிகரம் அளவு உயரே பறக்கும் என்பதுடன், தேனீக்கள் மகரந்த சேர்க்கை செய்வதால்தான் 80 விழுக்காடு உணவு மனிதர்களுக்கு கிடைக்கிறது என்ற தரவுகளை தந்து, தேனீக்கள் அழிந்தால் 4 ஆண்டில் மனித இனம் அழிந்து போகும் என்பதையும் எடுத்துக்காட்டி, தேனீ மீதான மதிப்பையும், அதனை பாதுகாப்பதன் அவசியத்தையும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

இப்படியாக, புத்தகம் முழுவதும் அரிய அறிவு சுரங்கமாக விளங்குகிறது என்பதை மறுக்க முடியாது. அனைவரும் வாசித்து அறிந்து கொள்ள வேண்டிய அருமையான கட்டுரைகளின் தொகுப்பு என்று உறுதியாக சொல்லலாம்.

**–மா.இளஞ்செழியன்.**

# அரசு போக்குவரத்து கழகத்துக்கு 552 புதிய தாழ்தள பஸ்கள்: அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, டிச.18

அரசு போக்குவரத்து கழகங்களின் மூலம் மக்களின் போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு 552 புதிய தாழ்தள பஸ்களை கொள்முதல் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டு உள்ளதாக அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகங்களின் கீழ் கிட்டதட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பெரும்பாலான பஸ்களின் பயன்பாடு 15 ஆண்டுகளை கடந்துவிட்டதாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் அந்த பஸ்களுக்கு மாற்றாக புதிய பஸ்களை தமிழ்நாடு அரசு கொள்முதல் செய்து மக்களின் போக்குவரத்து சேவைக்காக பயன்பாட்டுக்கு கொண்டு வருகிறது.

அந்த வகையில் தற்போது 552 புதிய தாழ்தள பஸ்களை கொள்முதல் செய்வதற்காக உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டு உள்ளதாக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் சா.சி. சிவசங்கர் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:

முதலமைச்சரின் உத்தரவின்படி, ரூ.500 கோடியே 97 லட்சம் மதிப்பில் 552 புதிய தாழ்தள பஸ்கள் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டு இருக்கிறது.

போக்குவரத்து கழகங்களின் பஸ்களை மேம்படுத்திடும் வகையிலும், மக்களின் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் வகையிலும் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்துக்கு 352 பஸ்களும், கோவை, மதுரைக்கு தலா 100 பஸ்களும் என மொத்தம் 552 பஸ்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு கொள்முதல் செய்யப்பட உள்ளன.

இந்த முயற்சிகளின்மூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் வாயிலாக வழங்கப்படும் பொது பஸ் சேவைகள் நாட்டில் முதன்மை யான நிலைக்கு உயர்ந்திடும்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.



மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் இணை அமைச்சா் எல்.முருகு, விஜிபி குழுமத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோஷத்தை நேரில் சந்தித்து காசியில் நடைபெறும் காசி தமிழ் சங்கமம் விழாவிற்கு விருந்தினராக கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்தார். அருகில் எம்.என்.ராஜா, விஜிபி குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் விஜிபி ரவிதாஸ், முதன்மை இயக்குநர் விஜிபி ராஜாதாஸ் உள்ளனர்.

# 'சுற்றுலா நகரமான' காஞ்சீபுரத்திற்கு ஆன்மீக பஸ் இயக்க அரசுக்கு கோரிக்கை



காஞ்சீபுரம் டிச. 18:

சுற்றுலா நகரமான காஞ்சீபுரத்தில் அதிகமான கோவில்கள் இருப்பதால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் ஆன்மீக பஸ்களை இயக்க அரசுக்கு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காஞ்சீபுரம் என்றாலே அனை வருக்கும் நினைவிற்கு வருவது கோவில்கள், பட்டு சேலைக்கு சிறந்த இடமாக உள்ளது. மேலும் 108 திவ்ய தேசங்கள் கொண்ட அதிகமான கோவில்கள் காஞ்சீபுரத்தில் உள்ளன.

சமீபத்தில் உலக பிரசித்தி பெற்ற காஞ்சீபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் பல ஆண்டுகளுக்குப் பிறகு அத்திவரதர் பொதுமக்களுக்கு எழுந்தருளி காட்சியளித்தார். இதைக் காண இந்தியா மற்றும் வெளிநாட்டு மக்கள் லட்சக்கணக்கில் வந்து தினந்தோறும் அத்திவரதரை தரிசித்து விட்டு சென்றனர். மேலும் தென்னிந்தியாவிலேயே சித்ரகுப்தருக்கு தனிக்கோவில் காஞ்சீபுரம் பஸ் நிலையம் அருகே உள்ளது.இந்தியா, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் காஞ்சீபுரத்துக்கு வருகை புரிந்து கோவில்களுக்கு செல்கின்றனர். ஆர்வத்துடன் தங்களுக்கு பிடித்த பட்டுச் சேலைகளை வாங்கி செல்கின்றனர்.

மேலும் காஞ்சீபுரத்தில் பிரசித்தி பெற்ற ஏகாம்பரநாதர் கோவில் உள்ளது. இக்கோவிலில் திருமணம் நடைபெறும் இடத்தில் மாமரம் உள்ளது. இந்த மாமரத்தில் வருடத்திற்கு அதிக மாங்காய்கள் காய்க்கும். இந்த மாங்காயை எடுத்து சாப்பிட்டால் கசப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என்ற நான்கு சுவைகளை கொண்டதாக இருக்கும்.

தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா ஆட்சி காலத்தில் இக்கோவிலில் உள்ள மாமரம் பழுதடைந்தது. உடனடியாக முதல்வர் ஜெயலலிதா கோவையில் இருந்து விசேஷ டாக்டர்களை ஏகாம்பரநாதர் கோவிலுக்கு வரவழைத்து மாமரத்திற்கு புத்துயிர் அளித்தார். இன்று இந்த மாமரம் நல்ல செழிப்புடன் வளர்ந்து வருகிறது. மரத்தின் அருகில்தான் அதிகமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

இப்படி பல வரலாற்று சிறப்புகள் உடைய காஞ்சீபுரத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் தினந்தோறும் வந்து செல்கின்றனர். ஆட்டோ கட்டணம் அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனி கவனம் செலுத்தி சுற்றுலா நகரமான காஞ்சீபுரத்திற்கு சுற்றுலா வளர்ச்சி கழக சார்பில் கோவில்களுக்கு சிறப்பு ஆன்மீக பேருந்துகளை குறைந்த கட்டணத்தில் விட ஏற்பாடு செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பக்தர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 50 ஆண்டுகளுக்கு பிறகு செங்கல்பட்டு அரசினர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயின்ற ஆசிரியர்கள் சந்திப்பு விழா



காஞ்சீபுரம், டிச.18–

செங்கல்பட்டு அரசினர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் 1971–1973 ஆம் ஆண்டு பயின்ற ஆசிரியர்கள் 50 ஆண்டுகாலம் நிறைவு பெற்றதை முன்னிட்டு சந்திக்கும் சங்கமம் விழா காஞ்சீபுரம் நாராயண குரு ஆழ்வார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஆசிரியர் நா. முத்து பெருமாள் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் கே. கருணாகரன், என். ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் ஆசிரியர் கழகம் மற்றும் முன்னாள் மாநில தேர்வு செயலாளர் வி. ஜீவரத்தினம் வரவேற்று பேசினார்.

காஞ்சீபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், முதன்மை கல்வி அலுவலர் வெற்றிசெல்வி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முனைவர் கவிஞர் கிருஷ்ணன், புலவர் டி. பழனிச்சாமி ஆகியோரை பாராட்டினர். பின்னர் பயிற்சி ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டி பேசினார்கள்.

இதில் ஓய்வு பெற்ற அனைத்து ஆசிரியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் வி.பழனி, தமிழ் ஆசிரியர் கழக முன்னாள் மாவட்ட தலைவர் கலைமணி ஆசிரியர் நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படிக்கும் காலத்தில் அவரவர்களுடைய பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். மேலும் ஆசிரியர்களாக பயிற்சி பெற்று பணியாற்றியபோது மாணவ செல்வங்களை எப்படி வழி நடத்தினார்கள் என்ற நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

இதில் நிகழ்ச்சி ஒருங்கிணைப் பாளர்கள் சதாசிவம், ராதாகிருஷ்ணன், ஸ்ரீ ராமுலு, புனிதவேல், பாலகிருஷ்ணன், ராஜகோபால், நமச்சிவாயம், சந்திரபோஸ், ஏகாம்பரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் 1971–1973 ஆம் ஆண்டு பயின்ற 120 ஆசிரியர்களில் 60 ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.


**கேப்ளின்பாய்ண்ட் லேபரட்டரீஸ் லிமிடெட்**

CIN - L24231TN1990PLC019053
''அஸ்விச் டவர்ஸ்'', 3வது மாடி, எண்.3, டெவலப்டு பிளாட்ஸ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ், பெருங்குடி, சென்னை 600 096. தொலைபேசி : + 91 44 24968000/8012772888/+91 44 71148000

**பங்குச் சான்றிதழ் காணாமல் போனது பற்றிய அறிவிப்பு**

கீழ்க்குறிப்பிட்டுள்ள கம்பெனியின் பத்திரங்கள் (மாற்று பத்திரங்களுடன் அல்லது இல்லாமல்) காணாமல் போய்விட்டன என்று பங்குதாரரால் / அவர்களின் சட்டபூர்வமான வாரிசுகளால் கம்பெனிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவற்றில் யாரும் எந்தவித வர்த்தகத்தையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அனைத்து பங்குதாரர்கள் / பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ.எண். | பங்குதாரர் பெயர் | போலியோ எண் | சான்றிதழ் எண் | குறியீட்டு எண்கள் | பங்குகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணா மண்டல் | 12774 | 111604 | 69643056-69643555 | 500 |

மேற்சொன்ன பங்கு சான்றிதழ்கள் மீது எவருக்கேனும் பாத்தியதை இருப்பின் அது குறித்து பதிவு அலுவலகம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர்கள், "RTA", இண்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், யூனிட் : கேப்ளின்பாய்ண்ட் லேபரட்டரீஸ் லிமிடெட், ''கென்சஸ் டவர்ஸ்'', 2வது தளம், எண்.1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை–600017 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு வரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பதிவு பெற்ற பங்குதாரருக்கு மாற்று பங்கு சான்றிதழ்களை வழங்கும் பணியை பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர்கள் மேற்கொள்வார்கள்.

கேப்ளின்பாய்ண்ட் லேபரட்டரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
வெங்கட்ராம் G
பொது ஆலோசகர் மற்றும் கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 18.12.2023



**City Union Bank Limited**
**MUGALIVAKKAM BRANCH**
**Phone: 63799 00215 / 044-22521141**

**JEWEL LOAN AUCTION NOTICE**

It is hereby informed that the under-mentioned borrowers have availed Jewel Loan in our Branch, the details of which are furnished below. As the said accounts are overdue, notices have been served to these persons demanding the closure of the accounts. Despite our reminders, the following Jewel Loan accounts have not been closed and the pledged jewels have not been redeemed. Hence, it is hereby informed that the said borrowers are advised to close the said accounts immediately. Failing which, the jewels pledged to the bank as security for the respective loan accounts will be auctioned in public by the branch at its premises on **26.12.2023 at 1.00 p.m**. or some other dates which is convenient to the bank without giving further notice regarding date of auction, to collect the entire amount including the interest to be charged in the account, along with expenses, if any, in connection with postages, paper publication & other misc. expenses.
It is further informed that this notice is also applicable for the legal heirs of the borrower in case the borrower is deceased. Also it is applicable for those borrowers who have not received the notice of reminders till date, for closure of the overdue accounts.
In case, any surplus amount available from the sale proceeds of the auction conducted would be adjusted to other dues if any to the bank by the borrower or by the guarantor. On the other hand, in case of any shortage of amount to close the Jewel Loan account due to decrease in sale value of jewels or some other reasons, appropriate legal action would be initiated against the borrower and/or guarantor for the recovery of the loan amounts.
In case of any part payment made in the account after this notice is served and still it is not closed, the bank reserve the right to auction such Jewels also.
It is informed that the Bank has the absolute right to cancel/ postpone the date of auction without any prior notice and that the Bank has the right to refrain from auctioning of certain jewels of JL accounts.

| S.No. | Jewel Loan No. | Date of Loan availed | Name and address of the borrower | Weight of Jewels in grams |
|---|---|---|---|---|
| 1 | 502112137007180 | 25.11.2022 | Mr V. Dhandapani, No 7/105, Krishna Street, Santhosh Nagar, Porur, Chennai - 600116 | 137.00 |
| 2 | 502112137010523 | 10.05.2023 | Mr G Kannan, Door No. 2/108, Perumal Kovil Street, Mugalivakkam, Chennai - 600125 | 15.9 |

Note: 1. The bidders should bring their PAN details and ensure KYC compliance as per RBI norms.
2. The successful bidder has to pay the bid amount immediately, otherwise their EMD will be forfeited.

**Place: Chennai**
**Date : 18.12.2023** **Branch Manager**



**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்** — ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு**

பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி ''பிஎன்பிஎச்எப்எல்'' என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் பிஎன்பிஎச்எப்எல் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு (கேஎம்பிஎல்) மாற்றப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. சங்கீத்குமார் எம் மற்றும் திரு. மோகன் மன்மோகன்,** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.HOU/OMR/0117/342791–ன்கீழ் 08.04.2019 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.32,27,994.11/–(ரூபாய் முப்பத்து ரெண்டு லட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று நான்கு மற்றும் பதினோரு பைசா மட்டும்)** மற்றும் 09.04.2019 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் **19.01.2024** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.34,00,000/– (ரூபாய் முப்பத்து நான்கு லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.3,40,000/– (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 18.01.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

**சொத்து விவரம்:** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் காலி வீட்டு மனை, மனை எண்.8 (வடக்குப் போர்ஷன்), விஸ்தீரணம் 1,200 சதுர அடி, சர்வே எண்.17/1, அங்கீகார எண்.மா.பா.மா.நா/2 நா.இ.எண்.49/72, கடப்பேரி கிராமம், காமாட்சி நகர், தாம்பரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்டு உள்ளது. எல்லைகள் : கிழக்கு : மனை எண்.9, மேற்கு : 30 அடி அகல சாலை, வடக்கு : சர்வே எண்.18–ல் உள்ள ராதா அம்மளுக்கு சொந்தமான நிலம், தெற்கு : எம். பாரதியால் விற்பனை செய்யப்பட்ட மனை.

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி பொது ஏலம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/ தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600) மற்றும் திரு. ராஜேந்திர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை, தேதி:** 18.12.2023 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**



**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உமில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள் வரை)**
**முதலேற்பு மனு எண்.765 / 2023**

இந்திய வாரிசு உரிமைச் சட்டம் XXXIX of 1925 தொடர்பான மனுவில், 24,08.2010 அன்று இறந்து போன டாக்டர். கோபாலகிருஷ்ண ராவ்.B அவர்களின் கடன் மற்றும் பங்கு பத்திரங்கள் தொடர்பான வாரிசு உரிமை கோருவது தொடர்பான மனு

1) திருமதி. B.காசி பாய்,
க/பெ. லேட் B. கோபாலகிருஷ்ண ராவ்,
பழைய எணா்.85, புதிய எண். 169,
பிரகாசம் ரோடு, பிராட்வே, சென்னை 600108
2) திரு. B.மஞ்சு நாத் ராவ்,
த/பெ. லேட் B. கோபாலகிருஷ்ண ராவ்,
காஸ்மோ நெஸ்ட் அப்பார்ட்மெண்ட்,
2வது தளம் D, எண்.2/16, பேங்க் தெரு,
கீழ்பாக்கம் எஸ்.ஓ., சென்னை – 600 010
3) திரு. B. பாஸ்கர் ராவ்,
த/பெ. லேட் B.கோபாலகிருஷ்ண ராவ்,
எண்.3/3, 2 வது குறுக்கு தெரு,
ஷாம் துளசி அப்பார்ட்மெண்ட்,
கீழ்பாக்கம் கார்டன், கே.ஜி. காலணி,
கீழ்பாக்கம், சென்னை 600010
4) திரு. B. குருராஜ ராவ்,
த/பெ, லேட் B.கோபாலகிருஷ்ண ராவ்,
எண்.954, 5வது மெயின் விவேகானந்தா நகர்,
மைசூர், கர்நாடகா 570023 .. மனுதாரர்கள்

சென்னை 600 108, பிராட்வே, பிரகாசம் ரோடு, புதிய எண்.169, பழைய எண்.85 என்ற முகவரியில் வசித்து வந்து 24.08.2010 அன்று இறந்து போன டாக்டர் கோபாலகிருஷ்ண ராவ் B அவர்களின் கடன் மற்றும் பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும், தங்களுக்கு தக்கதெனக் கருதினால், நீதிமன்றம் வாரிசு உரிமை சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு, சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 03.01.2024 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

செ. சத்தியராஜ்,
கே. அருணகிரி &
எஸ்.கே. முகமது ஆரிப்
மனுதாரர்கள் வடிக்கறிஞர்கள்,
எண்.93/45, அரண்மனைகாரன் தெரு,
சென்னை 600001

கோவிந்தராஜ் பாலகிருஷ்ணன்,
உதவி பதிவாளர்
முதலேற்பு பரிவு 1,
மெட்ராஸ் உயர்நீதிமன்றம்
சென்னை 600 104